# MCOP No.122/2019

**தேதி- 25.03.2021**

**ம.சா.1 ( சபரிநாதன் )**

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் மனுதாரர். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். பிரமாண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். ஆரணி கிராமிய காவல் நிலைய குற்ற எண்.644/2018 முதல் தகவல் அறிக்கையின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ-1. ஆரணி அரசு மருத்துவமனை வழங்கிய காயச் சான்றின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ-2. வேலூர் அரசு மருத்துவமனை வழங்கிய விடுவிப்புச் சான்றின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ-3. TN 23 BV 5349 என்ற பதிவு எண் கொண்ட டிராக்டரின் பதிவுச் சான்று நகல் ம.சா.ஆ-4. மேற்படி வாகனத்தின் காப்பீடுச் சான்று நகல் ம.சா.ஆ-5. 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் நகல் ம.சா.ஆ-6. மேற்படி வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ-7. பார்வை மகசரின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ-8. மாதிரி வரைபடத்தின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ-9. பிரிவு மாறுதல் அறிக்கையின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ-10. குற்ற அறிக்கையின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ-11. என்னுடைய ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ-12 (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது). சின்டிகேட் வங்கி ஆரணியில் உள்ள என் கணக்கிற்கான கணக்கு புத்தகத்தின் நகல் ம.சா.ஆ-13. (வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது ).

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Petitioners / Respondents and admitted by the witness to be correct.

Sd./ S. Syed Barkathullah
Additional District Judge,
Fast Track Court, Arani.